வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 15.05.2025 வியாழக்கிழமை இதழ் : 136 பக்கங்கள் : 12

தமிழின அழிப்பு நினைவுத்தூபி:

# நல்லிணக்க முயற்சிகளை சிக்கலாக்கும் செயல்பாடு!

## கனடிய தூதுவரை அழைத்து அரசு கண்டனம்!

கொழும்பு, மே 15

**“கனடாவின் இனப்படுகொலை குற்றச்சாட்டு, தமிழின அழிப்பு நினைவுத்தூபிக்கான அனுமதி என்பன இலங்கையின் நல்லிணக்கம், தேசிய ஒற்றுமைக்கான அரசாங்கத்தின் முயற்சிகளை சிக்கலாக்கும் - அவற்றை பெரிதும் பலவீனப் படுத்தும்” - இவ்வாறு கனடா தூதுவரிடம் கண் டனத்தை வெளியிட்டுள்ளது அரசாங்கம்.**

நேற்றைய தினம் கனடா தூதுவர் எரிக் வோல்ஷை தனது அமைச்சு பணிமனைக்கு நேரில் அழைத்து இந்தக் கண்டனத்தை வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் வெளியிட் டிருந்தார்.

இது குறித்து வெளி விவகார அமைச்சு வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

“இறுதிக் கட்டப் போரில் இனப்படு கொலை நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. தவறான தகவல்களை அடிப்படை யாகக் கொண்டது. இந் தப் பொய் கதையை இலங்கை முற்றிலும் நிரா கரிக்கிறது. கனடாவில் தேர்தல் ஆதாயத்துக்கான முதன்மையான பிரசார மாக இது உள்ளது. நாட் டின் பல்லின சமூகங்களி டையே தேசிய ஒற்றுமை - தேசிய நல்லிணக்கம் - நீடித்த அமைதியை ஏற் படுத்துவதற்கான அர சாங்கத்தின் தொடர் முயற்சிகளுக்கு இது தடையாகவும் - சிக்கலை ஏற்படுத்துவதாகவும் - அதனை பலவீனப்படுத் துவ தாகவும் உள்ளது.

“2021 ஏப்ரலில் கன டாவின் வெளி விவகார, வர்த்தகம் மற்றும் அபிவி ருத்தி திணைக்களம், இலங்கையில் இனப்படு கொலை நடந்ததாக எந்த வொரு கண்டுபிடிப்பை யும் கனடா அரசு மேற் கொள்ளவில்லை என் பதை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தி யது. 2006இல்

11

## செம்மணியில் இன்று அகழ்வுப்பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே. 15

செம்மணி பகுதியில், மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதிகளில் அகழ்வுப் பணிகள் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளன.

கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் செம்மணி பகுதி யில் உள்ள இந்து மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக் காக குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, விடயத்தை பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்ற தைத் தொடர்ந்து, பெப்ரவரி மாதம் 20ஆம்

11

## குமுதினிப் படுகொலையின் 40ஆம் ஆண்டு நினைவு இன்று!

யாழ்ப்பாணம், மே. 15

குமுதினி படுகொலையின் 40 ஆம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நெடுந்தீவில் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்படவுள்ளது.

மாவிலித்துறை வீரபத்திரப்பிள்ளையார் ஆலயம், மாவிலித்துறை சவேரியார் ஆலயம், மற்றும் தேவசபை ஆலயம் என்பவற்றில் படுகொலை செய்யப்பட்ட உறவு களின் ஆத்ம சாந்திக்கான வழிபாடுகள் சம நேரத்தில் காலை 08 மணிக்கு இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து காலை 9.00 மணிக்கு

11

## டிரான் அலஸ், தென்னக்கோன் ரூ.30 கோடி என்னிடம் கேட்டனர்!

பாதாள உலகக் குழு உறுப்பினர் தகவல்

கொழும்பு, மே 15

“முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகி யோர் கேட்ட 30 கோடி ரூபாயை நான் வழங்காததாலேயே தங் காலை சிறையில் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளேன்” என்று பாதாள உலகக் குழுவை சேர்ந்த ஹரக் கட்டா என்று அறியப்பட்ட நதுன் சிந்தக விக்ர மரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றைய தினம் வழக்கு ஒன் றுக்காக பொலிஸார் அவரை நீதி மன்ற வளாகத்தில் முற்படுத்தினர். அப்போதே, செய்தியாளர்களி டம் இதனை அவர் தெரிவித்தார்.

“என்னிடம் தெரிவிப்ப தற்கு பல விடயங்கள்

11

## வடக்கில் தமிழர்களின் நில இருப்பை சர்வதேசம் உறுதிப்படுத்தவேண்டும்!

இராஜதந்திரிகளிடம் தமிழ் தேசிய பேரவையினர் கோரிக்கை



கொழும்பு, மே 15

தமிழர் பகுதியில் தொடரும் காணி சுவீக ரிப்பு, குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு என்ப வற்றை நிறுத்துவதுடன், சட்ட விரோத கைதுகளையும் தடுத்து நிறுத்த வேண்டும். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக் கப்பட்டுள்ள விகாரையை அகற்றி உரிமை யாளர்களிடமே காணியை வழங்க வேண்டும். அரசாங்கத்துக்கு அழுத் தம் வழங்கவேண்டும் என்று

11



## கொத்மலையில் மீண்டும் விபத்து: 7 சிறுவர்கள் உட்பட 19 பேர் காயம்!

நுவரெலியா, மே 15

கொத்மலையில் நேற்றைய தினமும் ஹைஏஸ் வாக னம் ஒன்று 50 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்கு உள் ளானது. இதில், 7 சிறுவர்கள் உட்பட 19 பேர் காயங்க ளுக்கு உள்ளாகினர் என்று தெரியவருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டி - நுவரெ லியா வீதியில் கொத்மலை - இறம்பொடை

11

## தமிழின படுகொலைகள்: பல்கலையில் கண்காட்சி!

யாழ்ப்பாணம், மே 15

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன் னிட்டு தமிழின படுகொலைகள் தொடர்பிலான வர லாற்றை வெளிப்படுத்தும் கண்காட்சி யாழ். பல்கலைக் கழக கலைப்பீட பிரதான வளாகத்தில் (கைலாசபதி கலையரங்கு அருகில்) நேற்று ஆரம்பமானது.

‘நினைவாயுதம்’ என்கிற தொனிப்பொருளில்

11

## வடக்கிலிருந்து உற்பத்திகள் நேரடியாக வெளிநாடுகளுக்கு

ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 15

மூன்றாம் நபரின் தலையீடின்றி உற்பத்தியாளர்களே தமது உற்பத்திகளை நேரடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை எவ்வாறு உருவாக்கலாம் என்பது தொடர்பில் கலந்துரை யாடல் வடக்கு ஆளுநர் செயலகத்தில் நேற்று

11



## ஆனையிறவு உப்பள ஊழியர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்!

கிளிநொச்சி, மே. 15

கிளிநொச்சி - ஆனையிறவு தேசிய உப்பளத்தில் பணி புரியும் ஊழியர்கள் பல்வேறு பிரச்னைகளை சுட்டிக் காட்டி நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட் டனர்.

கிளிநொச்சி ஆனையிறவு உப்பளத்தில் பணியாற்றும் தற்காலிக பணியாளர்கள் தமக்கான நிரந்தர நியமனம் கோரியும் மேலதிக கொடுப்பனவுகள், தமக்கான அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல

11

# சின்னம்மை தொற்று அதிகரிப்பு; தடுப்பூசிக்கு பெரும் பற்றாக்குறை

கொழும்பு, மே. 15

நாட்டில் தற்போது சின்னம்மை நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், வைத்தியசாலைகளில் தற்போது நோயைத் தடுக்க உதவும் வெரிசெல்லா தடுப்பூசி பாற்றாக்குறை நிலவுவதாக தவல்கள் வெளியாகியுள்ளன.

தனியார் வைத்தியசாலைகளில் சின்னம்மை தடுப்பூசி பற்றாக்குறை நிலவுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தடுப்பூசி விலை 7,500 ரூபாய் முதல் 9,500 ரூபாய் வரை காணப்படுகிறது. அரச வைத்தியசாலைகளிலும் தடுப்பூசி பற்றாக்குறை காணப்படுகிறது.

இதன் காரணமாக கடந்த சில வாரங்களாக கணிசமான எண்ணிக்கையிலான நோயாளிகள் தனியார் வைத்தியசாலைகளில் தடுப்பூசியைச் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா கூறுகையில்-

அண்மைய நாட்களில் சின்னம்மை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சின்னம்மை என்பது வெரிசெல்லா-ஜோஸ்டர் வைரஸ் தொற்றால் ஏற்படும் நோயாகும். இந்த வைரஸ் சின்னம்மையால் பாதிக்கப்பட்ட தடுப்பூசி போடாத நபர்களிடமிருந்து மற்றையவர்களுக்குப் பரவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத மற்றும் பாதிக்கப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்களில் 90 சதவீதமானோருக்கு பரவக்கூடும்.

இந்த நோய் பொதுவாக நான்கு முதல் ஏழு நாட்கள் வரை நீடிக்கும். சின்னம்மையைத் தடுப்பதற்கான சிறந்த வழி சின்னம்மை தடுப்பூசியைப் பெறுவதே.

நோயாளிக்கு சின்னம்மை தொற்று ஏற்பட்டு 72 மணி நேரத்திற்குள் (மூன்று நாட்கள்) தடுப்பூசி போடுவது சிறந்ததாகும்.

சிறுவர்கள், இளம் வயதினர் மற்றும் ஒருபோதும் சின்னம்மை நோயால் பாதிக்கப்படாதவர்கள் அல்லது தடுப்பூசி செலுத்தப்படாத பெரியவர்கள் உட்பட அனைவருக்கும் சின்னம்மை தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது.

தடுப்பூசி செலுத்தப்பட்டவர்கள் பெரும்பாலானவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படமாட்டார்கள் - என்றார். (அ)



# போரில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு கைதடியில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே. 15

கைதடியில் யுத்தத்தின் போது படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் மற்றும் 1984.08.13 அன்று படுகொலை செய்யப்பட்ட கைதடி பல நோக்கு கூட்டுறவுச்சங்க பணியாளர்களுக்கு நேற்று முன்தினம் கைதடியில் உள்ள நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஓர் அங்கமாக மேற்படி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், தென்மராட்சி-கைதடி முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கப்பட்டது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் கலந்து கொண்டனர். (அ)

# நயினாதீவு - குறிகாட்டுவான் பாதை படகு நீரில் மூழ்கியது!



யாழ்ப்பாணம், மே. 15

நயினாதீவு-குறிகாட்டுவான் இடையில் சேவையில் ஈடுபட்ட பாதை படகு நேற்று முன்தினம் இரவு கடலில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இப்பாதை படகு நயினாதீவு - குறிகாட்டுவான் இடையே சேவையில் ஈடுபட்ட நிலையில் நீண்டகாலமாகப் பழுதடைந்து சேவையில் ஈடுபட முடியாமல் நயினாதீவு துறைமுகத்தில் தரித்துவிடப்பட்டிருந்தது. இதனை அடுத்து கடும் கடும் காற்றினால் அது கடலில் மூழ்கியுள்ளது.

இதேவேளை, அண்மையில் இப் பாதை படகு திருத்தப்பட்டு சீரான சேவையை வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# முதியோர் கொடுப்பனவு எடுக்கச் சென்ற வயோதிபரை துரத்திய அஞ்சல் அலுவலர்!

## புதுக்குடியிருப்பில் பரபரப்பு

முல்லைத்தீவு, மே. 15

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் முதியோர் கொடுப்பனவு எடுக்க சென்ற முதியோர் ஒருவரை கொடுப்பனவு தர முடியாது எனத் துரத்திவிட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள அஞ்சல் அலுவலகத்துக்கு நேற்றுக் காலை முதியோர் கொடுப்பனவு எடுக்க முதியவர் ஒருவர் சென்றார். அவர் கொடுப்பனவுக்காக இரண்டு மணி நேரத்துக்கு மேலாகக் காவல் இருந்தார். நேரம் செல்கிறது, என்னை மிக விரைவாக அனுப்பும்படி அவர் கேட்டுள்ளார். அப்போது அங்கு நின்ற முன்னாள் அஞ்சல் அலுவலரும் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிச் சபை தேர்தல் வேட்பாளருமான நபர் அந்த முதியோரை தமக்கு வாக்கு போடவில்லை என கடிந்துள்ளார்.

இதனை அடுத்து அந்த நபர் தற்போது அஞ்சல் அலுவலக உத்தியோகத்தராக இருக்கும் ஒருவரிடம் சென்று முதியவருக்கு கொடுப்பனவு கொடுக்க வேண்டாம் எனக் கூறிச் சென்றுள்ளார்.

இதன் பின் அஞ்சல் அலுவலரிடம் முதியவர் சென்றுள்ளார். ஆயினும் அந்த அலுவலர் முதியவரை பல கீழ்த்தரமான வாத்தைகளை பயன்படுத்தி பேசியதுடன் முதியோர் கொடுப்பனவு அட்டையை தூக்கி எறிந்து தனது கோபத்தினை வெளிப்படுத்தினார்.

250 ரூபாவுக்காக 2 கிலோ மீற்றர் பயணம் செய்து வந்த முதியவர் அவமானப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ-5)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி நேற்று கம்பர்மலையில்!



யாழ்ப்பாணம், மே. 15

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வடமராட்சி கிளையின் ஏற்பாட்டில் நேற்று கம்பர்மலையில் இடம்பெற்றது.

பாரதி இளைஞர்களின் ஏற்பாட்டில், வல்வைட்டித்துறை கம்பர்மலைச் சந்தியில் அமைந்துள்ள நினைவாலய முன்றலில், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு சுடரேற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்பதாக, கம்பர்மலை வல்வெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில், ஆத்மா சாந்தி வேண்டி பூசை வழிபாடு இடம்பெற்றதை தொடர்ந்து, நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

(அ)

# முன்பிணை கோரிய மகிந்தானந்த



கொழும்பு, மே. 15

தன்னை இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கைது செய்வதற்கு முன்னர் முன்பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தரமற்ற கரிம உரத் தொகையை நாட்டுக்கு இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்படுவதற்கு முன்னர் முன்பிணையில் விடுவிக்குமாறு கோரி குறித்த மனுவை தாக்கல் செய்துள்ளார். (அ)

# முள்ளிவாய்க்கால் நினைவை முன்னிட்டு யாழ்.பல்கலையில் இரத்ததான முகாம்!



யாழ்ப்பாணம், மே. 15

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஒருங்கிணைப்பில் 'குருதியால் தோய்ந்த நம் தேசத்திற்காய் ஒரு துளி குருதி' எனும் கருப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், அதனை நினைவு கூரும் முகமாக இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு குருதிக்கொடையில் ஈடுபட்டனர். தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர்கள் என அனைவரும் இனம், மதம், மொழி பேதங்களை கடந்து இந்த இரத்ததான முகாமில் பங்கேற்றனர்.

(அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
15.05.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கனடிய - இலங்கை உறவு

கனடாவில், இனப்படுகொலை நினைவாலயம் நிர்மாணிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அரசாங்கத்தின் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகரிடம் அரசாங்கத்தின் எதிர்ப்பை இராஜதந்திர ரீதியில் வெளிப்படுத்தியிருக்கிறார். இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது இனப்படுகொலை இடம்பெற்றதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உறுதிப்படுத்தப்படாத நிலையில் கனடாவில் இடம்பெறும் இவ்வாறான செயல்கள் அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகளை பாதிக்கும் என்று ஹேரத் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில், கனடாவின் புதிய அமைச்சரவையில் ஈழத் தமிழரான ஹரி ஆனந்தசங்கரி பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஹரி ஆனந்தசங்கரி இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது இனப்படுகொலை இடம்பெற்றதான குற்றச்சாட்டை ஆதரிக்கும் ஒருவர். இவ்வாறான பின்புலம் கொண்ட ஒருவர் கனடிய அமைச்சரவையில் முக்கிய பொறுப்பில் நியமிக்கப்பட்டிருப்பதானது, எதிர்காலத்தில் இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவை சிக்கலாக்குவதில் செல்வாக்குச் செலுத்தலாம்.

இந்த அடிப்படையில் நோக்கினால், இலங்கையுடனான சுமுகமான உறவு அவசியமான ஒன்று என்னும் பார்வை கனடாவிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இலங்கை தொடர்பான கனடிய வெளிவிவகார அணுகுமுறையானது அதிகம் கனடாவில் வாழும் - உள்ளூர் தமிழர்களின் வாக்குகளை அறுவடை செய்தல் என்னும் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. ஸ்டீபன் ஹார்ப்பர் அரசாங்கம் இருந்த காலத்திலும் அவரின் அணுகுமுறை அதிகம் வாக்குப் பெட்டியை அடிப்படையாகக் கொண்டிருந்தாகவே குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை வாக்குப் பெட்டி மேலாதிக்கம் (Ballot box supremacy) என்பர். அவ்வாறானதோர் அணுகுமுறையைத்தான் புதிய கனடிய அரசாங்கமும் கைக்கொள்வதாகத் தெரிகிறது.

இன்னொரு புறம் கனடாவில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான அரசியல் செயல்பாடுகள் தென்னிலங்கை அரசியலை பொறுத்தவரையில் சிங்கள தேசியவாத எதிரணிகளுக்கான அரசியல் மூலதனமாகவும் பயன்படுகிறது. கனடாவில் இனப்படுகொலை நினைவாலயம் நிறுவப்பட்ட விடயத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்பதை முதலில் நாமல் ராஜபக்ஷவே கையிலெடுத்திருந்தார். 2029இல், ஆட்சியைக் கைப்பற்றும் முனைப்பில் இருக்கின்ற ராஜபக்ஷ தரப்புகளைப் பொறுத்தவரையில் இவ்வாறான விடயங்கள் பழம் நழுவி பாலில் விழுவது போன்றது. ஏற்கனவே, மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் கனடாவில் தடை செய்யப்பட்டிருக்கின்றனர். அந்தத் தடையால் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் பாதிக்கப்படவில்லை.

தமிழர்கள் அதிகளவில் குடியேறியிருக்கும் நாடுகளில் கனடாவே முதன்மையானது. கனடாவின் உளளூர் அரசியலில் ஈழத்தமிழர்கள் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றுவிட்டனர். இதன்மூலம் கனடா மூலமாக, வடக்கு - கிழக்கின் சமூக, பொருளாதார முன்னேற்றங்களில் காத்திரமான தலையீடுகளை செய்யும் வல்லமை ஈழத்தமிழர்களுக்கு உண்டு.

ஆனால், கனடாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சுமுகமான உறவு நீடித்தால் மட்டுமே அது சாத்தியப்படும். ஆனால், நடைபெறும் விடயங்களை உற்று நோக்கினால் அதற்கான வாய்ப்பு மிகவும் மங்கலாகவே தெரிகிறது. இதேவேளை, கனடிய அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் வெற்றிக்கான ஒரு துருப்புச்சீட்டாகவே, ஈழத் தமிழர் விவகாரத்தை கையாள்வதாகவும் தெரிகிறது. இதற்கு ஹரி ஆனந்தசங்கரியும் விதிவிலக்கல்ல.

# நீண்ட தூர பஸ் சேவைகளுக்காக புதிய பாதுகாப்பு நடைமுறைகள்!

கொழும்பு, மே. 15

நீண்ட தூர பஸ் சேவைகளுக்காக பல புதிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுவதற்கு இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, 6 மணி நேரத்துக்கும் மேலான எந்தவொரு நீண்ட தூர பயணத்துக்கும், 2 வெவ்வேறு பஸ் சாலைகளின் ஒருங்கிணைப்புடன் 2 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ஜீவக பிரசன்ன அறிவித்துள்ளார்.

சாரதிகளின் சோர்வைக் குறைத்து சிறந்த மேற்பார்வையை உறுதி செய்வதன் மூலம் பாதுகாப்பை மேம்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து துறைசார் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ஜீவக பிரசன்ன தெரிவித்துள்ளார்.

(அ)

# ஊர் மக்களிடம் சிக்கினார் போதைப்பொருள் வர்த்தகர்

கொழும்பு, மே. 15

மாவனல்லை அருகே போதைப்பொருள் வர்த்தகர் ஒருவரை ஊர்மக்கள் ஒன்றுதிரண்டு பொலிஸில் பிடித்துக் கொடுத்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

மாவனல்லை அருகே உள்ள ஹெம்மாதகம கிராமத்தில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

குறித்த கிராமத்தில் சுமார் 27 வருடங்களாக நபரொருவர் போதைப்பொருள் வர்த்தகம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஊர்மக்கள் ஒன்று சேர்ந்து, இளைஞனொருவனை குறித்த போதைப் பொருள் வர்த்தகரிடம் போதைப்பொருள் வாங்குவது போல அனுப்பி அவரை கையும் களவுமாக பிடித்துள்ளனர்.

அதனையடுத்து சந்தேக நபரை பொறுப்பேற்க ஹெம்மாதகமை பொலிஸார் மட்டுமன்றி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் அவ்விடத்துக்கு வருகை தந்த போதும் பொதுமக்கள் குறித்த நபரை பொலிஸில் ஒப்படைக்க மறுப்புத் தெரிவித்தனர்.

முன்னர் நடைபெற்ற சம்பவங்கள் போன்று ஹெம்மாதகமை பொலிஸார் சந்தேக நபருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளமாட்டார்கள் என்று ஊர்மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கேகாலை பொலிஸ் நிலையப் பொலிஸார் வருகை தந்து சந்தேக நபரைப் பொறுப்பெடுத்து சட்ட நடவடிக்கைகளுக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

(அ)

## செம்மணி விபத்து; இளைஞர்கள் காயம்!

யாழ்ப்பாணம், மே 15

செம்மணியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளும் பட்டா ரக வாகனமும் மோதி இந்த விபத்து இடம்பெற்றது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்களே காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-05)

# ஜூன் 2 வரை காலக்கெடு!

கொழும்பு, மே. 15

உள்ளூராட்சி மன்றங்களில் முக்கிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் பெயர்களை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஒரு வார காலத்துக்குள் வழங்கவேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மையைப் பெற்ற குழுக்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேயர், துணை மேயர்,தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிகளுக்கான தங்கள் விருப்பங்களை அறிவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களின் பெயர்கள், சபைகள் மற்றும் தொடக்க அமர்வுகளை நடத்துவதற்கு முன்பு, பிரதேச மட்டத்தில் அதிகாரபூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் ரத்நாயக்க கூறியுள்ளார்.

எந்த ஒரு கட்சியோ அல்லது குழுவோ பெரும்பான்மையைக் கொண்டிருக்காத சபைகளில் தலைவர்களை தேர்ந்தெடுப்பது ஜூன் 2 ஆம் திகதி நடைபெறும் முதல் கூட்டத்தின்போது வாக்களிப்பதன் மூலம் தீர்மானிக்கப்படும் என்றும் மேலும் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகள், ஜூன் 2 ஆம் திகதி அன்று அதிகாரபூர்வ பதவிக் காலத்தை தொடங்க உள்ளன என்று தேர்தல் ஆணைக்குழுதலைவர் கூறினார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






மே - 15 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 01
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.030 - 03.00
திதி : திருதியை

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவை.

**இடபம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வர்கள். திறமைகள் வெளிப்படும்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும்.

**கடகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு

**சிம்மம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக் குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். அரசால் ஆதாயம் உண்டு அதிகாரப்பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.

**தனுசு**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். மேலதிகாரியுடன் விவாதம் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுவம் உண்டாகும். உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். அதிஷ்டம் நிறைந்த நாள்.

# யாழில் நான்கு சபைகளின் ஆட்சியை த. தே. ம. முன்னணி உரிமை கோரும்!

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 15

**"பருத்தித்துறை நகர சபை, வல்வெட்டித்துறை நகர சபை, சாவகச்சேரி நகர சபை, ஊர்காவற்துறை பிரதேச சபை ஆகிய நான்கு சபைகளிலும் தவிசாளர் பதவிக்காக எமது உறுப்பினர்களைக் களமிறக்குவோம்", என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு,

யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் பருத்தித்துறை நகர சபை, வல்வெட்டித்துறை நகர சபை, சாவகச்சேரி நகர சபை ஊர்காவற்துறை பிரதேச சபை ஆகிய நான்கு சபைகளிலும் தவிசாளர் பதவிக்காக எமது கட்சியை சார்ந்தவர்கள் போட்டியிடுவார்கள்.

ஏனைய சபைகளில் கூடுதலான வாக்குகளைப் பெற்ற, தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுடன் உள்ள கட்சிக்கு ஆதரவு தேவைப்படும் பட்சத்தில் நாம் அவற்றை வழங்குவோம்.

ஆனாலும், உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பாக எம்முடன் பேச்சு மேற்கொள்ளாமல் இலங்கை தமிழ் அரசு கட்சி ஒருதலைப் பட்சமாக விலகியுள்ளது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியுடன் பேச்சு நடத்துவதற்குக் கோரியிருந்தபோதும் பங்காளிக் கட்சிகளுடன் பேசி முடிவை அறிவிப்போம் என்று கூறியிருந்தார்கள். ஆனால், இது வரை எந்த முடிவையும் அறிவிக்கவில்லை - என்றார். (ஐ)

# தம்பாட்டி பாடசாலையில் நூலகம் திறந்து வைப்பு



யாழ்ப்பாணம், மே 15

தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மாணிக்கம் பூமணி ஞாபகார்த்த நூலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

அதிபர் ந. வில்லியம் சாந்த குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராக பங்கேற்றார். அவர், தேசியக் கொடியை ஏற்றி வைத்ததுடன், நூலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்து, நினைவுக் கல்லையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக, வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் பங்கேற்றார். கௌரவ விருந்தினராக தீவக வலய கல்விப் பணிப்பாளர் தி. ஞானசுந்தரன் பங்கேற்றார்.

மேடை நிகழ்வுகளில் "நெய்தலின் ஊற்று" என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது டன், நூலகத்தை அமைப்பதற்கு அன்பளிப்புகள் வழங்கிய வர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

2021ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு ஒரு கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

நூலக திறப்பு விழாவைத் தொடர்ந்து, புலம்பெயர் சமூகத்தின் உதவியுடன் பாடசாலையில் அமைக்கப்பட்ட வாகனத் தரிப்பிடமும் ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது. (அ-ஐ)

# சுழிபுரத்தில் விஷமிகளால் தண்ணீர் தாங்கி உடைப்பு!



யாழ்ப்பாணம், மே 15

சுழிபுரம் மேற்கு கலை மகள் விளையாட்டு கழக மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர் தாங்கியும், தண்ணீர் குழாய்களும் விஷமிகளால் அடித்து நொருக்கபட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவையாவன,

சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டு கழகத்தின் மைதானத்தில் புலம்பெயர் தேச உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் பசுமை புரட்சி திட்டத்தின் கீழ் குடி தண்ணீர் வழங்குவதற்காக தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டது.

இந்நிலையில், மூன்று தினங்களுக்கு முன்னர் குறித்த தண்ணீர் தாங்கியும், விநியோகக் குழாய் அமைப்பும் விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதவு செய்யப்பட்டுள்ளது. பலருக்கு நன்மை தரும் விதத்தில் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டத்தை சேதப்படுத்தியமைக்கு அந்தப் பகுதி மக்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (ஐ)

# சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், மே 15

பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார திருவிழாவை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஜூன் முதலாம் திகதி வரை தினமும் இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் சைவப்புலவர்கள் கந்த. சத்தியதாசன், கெ. த. குமரன், ச. முகுந்தன், பொன். சந்திரவேல், இளம் சைவப்புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைவாசன், த. மனோஜ்குமார் ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளனர். (ஐ)

***

சிறுப்பிட்டி மேற்கு அருள் மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்பு சொற்பொழிவு தொடர் - 05 நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோதி முனிவர் குருபூசையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வு நடைபெறும். இதைத் தொடர்ந்து, இளம் சைவப்புலவர் த. மனோஜ்குமார் "திருமணப்படலம்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

# கொட்டாஞ்சேனை சிறுமி மரணம் விசேட விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே. 15

கொட்டாஞ்சேனையில் உயிரிழந்த சிறுமியின் மரணம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பிறிதாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது. குறித்த விடயம் தொடர்பில் தகவல்களை திரட்டுவதற்காக 10 பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பிரீத்தி இனோக்கா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனையில் தொடர்மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்ட சிறுமியின் உயிரிழப்பு தொடர்பில் எதிர்ப்பு நடவடிக்கைகள் பல முன்னெடுக்கப்பட்ட பின்னணியிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இனப் படுகொலைகளில் இலங்கை ஈடுபடவில்லை

## முன்னாள் அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, மே. 15

**இலங்கை இனப்படுகொலையில் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ள முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கனடாவில் தமிழர் இனப்படுகொலை நினைவுச்சின்னம் திறப்பு, இனப்படுகொலை கல்வி வாரம் அனுசரிப்பு போன்றவற்றை கடுமையாக விமர்சித்துள்ளார்.**

சமூக ஊடக பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் ஒற்றுமை மற்றும் கௌரவம் நல்லிணக்கத்திற்காக ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு குடிமகன் என்ற அடிப்படையில் கனடாவின் ஒன்டாரியோவில் தமிழர் இனப்படுகொலை நினைவுச்சின்னம் திறப்பு இனப்படுகொலை கல்வி வாரம் அனுசரிப்பு போன்ற விடயங்களால் நான் திகைப்பும் கவலையுமடைந்துள்ளேன்.

ஒரு விடயத்தை நான் தெளிவாக தெரிவிக்க விரும்புகின்றேன், இலங்கை இனப்படுகொலையில் ஈடுபடவில்லை. அந்த கூற்று ஆதாரமற்றது மாத்திரமல்ல மிகவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

எந்தவொரு சர்வதேச நீதிமன்றமும் இலங்கையை இதுவரை இனப்படுகொலைக் குற்றவாளியாக கண்டறியவில்லை.

இலங்கையில் நடந்தது துன்பகரமான-ஆனால் கனடா உட்பட 30 இற்கும் அதிகமான நாடுகளில் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பினருடனான மோதலை முடிவுக்கு கொண்டுவருவதற்கான இராணுவ நடவடிக்கை.

அது பயங்கரவாதத்துக்கு எதிரான போர், எந்த சமூகத்துக்கும் எதிரானது இல்லை.

போரின்போது அப்பாவிகள் ஒவ்வொருவரினதும் உயிரிழப்பு மனவேதனையை ஏற்படுத்தினாலும், மோதலை இனப்படுகொலை எனச் சித்தரிப்பது உண்மையை சிதைப்பது மாத்திர மல்லாமல், அவமதிப்பை ஏற்படுத்துகின்ற ஒரு விடயம்.

கனடாவில் இடம்பெறும் இந்த செயற்பாடுகள், நமது கள யதார்த்தங்களில் இருந்து வெகு தொலைவில் உள்ளன.

மேலும் வாக்கு வங்கியை நோக்கமாக கொண்ட இவ்வாறான நடவடிக்கைகளினால் பழைய காயங்கள் மீண்டும் கிளறப்படலாம். மேலும் ஒரு தேசமாக காயங்களை ஆற்றுவதில் அடைந்துள்ள முன்னேற்றத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தலாம்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# டெங்கு, சிக்குன்குனியா நோய்கள் பரவும் அபாயம்

கொழும்பு, மே. 15

தானசாலைகளின் பின்னரான காலப்பகுதியில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

விசாக பூரணையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல பகுதிகளிலும் தானசாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.



தானசாலைகள் நடத்தப்பட்ட பின்னர், வீசப்படும் கழிவுகளால் டெங்கு மற்றும் சிக்குன்குனியா பரவும் அபாயம் உள்ளதால், தானசாலைகளை ஏற்பாடு செய்தவர்கள் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார். (அ)

# உள்ளூராட்சி நிலையியல் குழுக்களை தாமதம் காட்டாது உடனே நிறுவுங்கள்

## கரு ஜயசூரிய கோரிக்கை

கொழும்பு, மே. 15

உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிலையியல் குழுக்களை நிறுவுவதற்கான வர்த்தமானி அறிவித்தலை தாமதமின்றி வெளியிடுமாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கருஜயசூரிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் மாகாண ஆளுநர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகெங்கிலும் உள்ள பிரதிநிதித்துவ அமைப்புகளில் முக்கிய பிரிவுகளாக இருக்கின்ற விடயம் நிலையியல் குழுக்களை நிறுவுவதாகும். இதுதொரு மிக முக்கியமான நடைமுறையுமாகும். இந்தக் குழுக்கள், வெளிப்படைத்தன்மை, மேற்பார்வையை மேம்படுத்துகின்றன. பொறுப்புக்கூறலை உறுதி செய்கின்றன உள்ளூராட்சி மன்றங்களின் ஒட்டுமொத்த செயற்றிறனை மேம்படுத்துகின்றன.

இலங்கையில் உள்ளூராட்சி தொடர்பான சட்டங்கள் நிலையியற் குழுக்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தாலும், அவற்றின் உருவாக்கம் மற்றும் செயற்பாடு குறித்த விரிவான வழிகாட்டுதல்கள் அவற்றில் இல்லை. 2011ஆம் ஆண்டிலும் - மீண்டும் 2018ஆம் ஆண்டிலும் தொடர்புடைய சட்டங்களில் வரைவுத் திருத்தங்களை உருவாக்கி, அத்தகைய தெளிவை வழங்கவும், குழுக்களில் குடிமக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கவும் உதவுகின்றன என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம்.

துரதிர்ஷ்டவசமாக, 2017 முதல் செயலற்ற தன்மை காரணமாக குறித்த குழுக்களின் முன்னேற்றம் தேக்கமடைந்துள்ளன.

இந்த நீண்டகால தாமதம் மேலும் தொடரக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம். மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்குப் பொருந்தக்கூடிய துணைச் சட்டங்களைக் கொண்ட வர்த்தமானி அறிவிப்புகள் மூலம் நிலையியல் குழுக்களை உடனடியாக நிறுவ வேண்டும்.

மேலும், கணினிக் கட்டமைப்புகள் மீண்டும் செயற்படுத்தப்படும் வரை காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. முந்தைய வரைவுகளின் அடிப்படையில் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தயாரித்த மாதிரி துணைச் சட்டம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்பு செயன்முறை மற்றும் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட தூய்மையான இலங்கை திட்டம் போன்ற முக்கிய தேசிய முயற்சிகளை செயற்படுத்துவதில் உள்ளூராட்சி மன்றங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன, குறிப்பாக தற்போதைய கடன் நெருக்கடி மற்றும் அதிகரித்து வரும் கட்டணங்களின் பின்னணியில் அவற்றின் பங்களிப்பு இன்றியமையாதது.

எனவே, நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்கானதொரு அத்தியாவசிய நடவடிக்கையாக ஜனாதிபதியையும் அந்தந்த மாகாண ஆளுநர்களையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்-என்றார். (அ)

# இந்த வருடத்தின் முதல் காலாண்டில் தேயிலை ஏற்றுமதி வருமானம் உயர்வு



கொழும்பு, மே. 15

இந்த வருடத்தின் முதலாவது காலாண்டில் தேயிலை ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு 371 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்துள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிடும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை 355 அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டியிருந்தது. 11 வருடங்களின் பின்னர் தேயிலை ஏற்றுமதியின் மூலம், வருடமொன்றின் முதல் காலாண்டில் இவ்வாறு அதிகூடிய வருமானம் கிடைத்துள்ளது.

இலங்கையில் அதிக வருமான ஈட்டும் துறையாக பெருந்தோட்ட கைத்தொழில் துறையை மாற்றி அதனூடாக கிடைக்கும் வருமானத்தை 2.5 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க ஜனா திபதி பாதீட்டில் முன்வைத்த முன்மொழிவுக்கு ஏற்ப அவர்களுக்கான வேதனம் அதிகரிக்கப்படும்

இது தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இந்த வருடத்தில் தலா 28 இலட்சம் ரூபாய் செலவில் 6,000 வீடுகளை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்காக, இந்திய நிதியுதவியையும், நாட்டு மக்களின் வரிப் பணத்தையும் செலவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளது. அத்துடன், அவர்களுக்கு 10 பேர்ச் காணியும் வழங்கப்படும்-என்றார். (அ)

# வீட்டுத் தோட்டத்துக்குள் புகுந்த இராட்சத முதலை!

கொழும்பு, மே. 15

அநுராதபுரம் - பிரியங்கரகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இஹலஹல்மில்லேவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் தோட்டத்துக்குள் இராட்சத முதலை ஒன்று புகுந்துள்ளது.

சுமார் 08 அடி உயரமுடைய இராட்சத முதலை ஒன்றே இவ்வாறு வீட்டுத் தோட்டத்துக்குள் புகுந்துள்ளது. பின்னர் பிரதேசவாசிள் சிலர் இணைந்து முதலையை பிடித்து வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

முதலையை வில்பத்து தேசிய பூங்காவில் விடுவதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# 2 நாள்களில் போக்குவரத்து விதிகளை மீறிய 100இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பறிமுதல்

கொழும்பு, மே. 15

கடந்த இரண்டு நாட்களில் போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டில் உந்துருளிகள் உட்பட 100 இற்கும் மேற்பட்ட வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பண்டாரகம, கிதேல்பிடிய பகுதியில் அதிக திறன் கொண்ட 4 மோட்டார் சைக்கிள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 21 முதல் 23 வயதுக்குட்பட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

மேலும் அத்துருகிரிய மற்றும் கல்கிஸை பொலிஸ் பிரிவுகளில் மதுபோதையில் வாகனம் செலுத்திய ஓட்டுநர்களின் மோட்டார் சைக்கிள்கள், கார்கள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப் பட்டன.

இதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# வெறும் வார்த்தைகளை விடுத்து அபிவிருத்தியை செயலில் காட்டுக!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 15

**வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கு, கட்சி பேதங்களையும், வீண் பேச்சுகளையும் விடுத்து அதற்கான செயல்களில் களமிறங்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

மாத்தறை - ஊராபொல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைவரும் பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுவதன் மூலம், விழுந்துள்ள படுகுழியிலிருந்து மீள முடியும். 2028 ஆம் ஆண்டு முதல் நாம் கடனை மீளச் செலுத்தவேண்டும். 2033 ஆம் ஆண்டு முதல் கடனை திருப்பிச் செலுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் தெரிவித்தது. எனினும், முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அதனை 2028 ஆகக் குறைத்து இணக்கப்பாட்டை எட்டியது.

எனவே, 2028 ஆம் ஆண்டுக்குள், கடனை அடைக்க அதிக அளவிலான பொருளாதார வளர்ச்சி எமக்குத் தேவையாகவுள்ளது.

5 வீத பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பேணிச் செல்ல வேண்டும் என நிபுணர்கள் கூறுகின்றனர். அரச வருவாயை அதிகரிக்கவேண்டும். ஏற்று மதியை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டுக் கையிருப்புக்களை அதிகரிக்கவேண்டும்.

இவற்றைச் செய்ய முடியாவிட்டால், நமது நாடு மீண்டும் ஒரு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியான துயரத்தை நோக்கிச் செல்லும்.

நாடு வீழ்ச்சி கண்டால், அது அரசியல், இன, மத அல்லது



வர்க்க வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் பாதிக்கும்.

நாட்டுக்குப் பெறுமானம் சேர்க்கும் நடவடிக்கை கல்வி மற்றும் சுகாதாரம், தொழில், விவசாயம், சேவைகள் போன்ற துறைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்.

புதிய வாய்ப்புகளைத் தேட வேண்டும். வெறும் வார்த்தைகளால் மட்டுமல்லாது, செயல்களாலும் அபிவிருத்தியை யதார்த்தமாக்க வேண்டும்-என்றார். (அ)

# கடலுக்கு நீராடச் சென்றிருந்த 4 இளைஞர்கள் சடலமாக மீட்பு!

## புத்தளம் கடலில் துயரம்

கொழும்பு, மே. 15

புத்தளம் வென்னப் புவ பகுதியில் உள்ள கடலில் நீராடச் சென்ற நான்கு பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக வென்னப்புவ பொலிஸார் மேலும் கூறினர்.

குறித்த நான்கு இளைஞர்களும் ஒன்றாக இணைந்து கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து வென்னப்புவ பொலிஸார் மற்றும் கடற்படையினர் ஆகியோரின் உதவியோடு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர்களில் மூவர் பொகவந்தலாவ சென் விஜயன்ஸ் தோட்டத்தை சேர்ந்தவர்கள் எனவும் மற்றுமொரு நபர் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் , உதயகுமார் ஸ்ரீதரன் (வயது 17), ஸ்ரீகாந்த் சரன்ராஜ் (வயது 19), ஸ்ரீகாந்த் அஜித்குமார் (வயது 18), யூசுப் (வயது 27) ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் வென்னப்புவ - போலவத்த பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை சடலமாக மீட்கப்பட்டவர்களுள் ஸ்ரீகாந்த் சரன்ராஜ் மற்றும் ஸ்ரீகாந்த் அஜித்குமார் ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் எனவும் உதயகுமார் ஸ்ரீதரன் உறவினர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட நான்கு சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக வென்னப்புவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லபட்டுள்ளன. (அ)



# கரையொதுங்கிய டொல்பின்கள்!

கொழும்பு, மே. 15

களுத்துறை தெற்கு கடற்கரையில் ஆறு டொல்பின்கள் கரை ஒதுங்கியுள்ளன.

கரையொதுங்கியுள்ள 6 டொல்பின்களும் ஏதேனும் விபத்துக்குள்ளாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு திணைக்களத்தின் கால்நடை வைத்திய பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், களுத்துறை கடற்கரை இந்த நாட்களில் கொந்தளிப்பாக காணப்படுவதாக உயிர்காப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ)

# நாட்டில் உப்பின் விலை உயர்வால் உணவுப்பொருள் பதனிடல் சிரமம்

கொழும்பு, மே. 15

உப்பு விலை உயர்வினால் உணவுப் பொருட்களைப் பதப்படுத்த முடியவில்லை என உப உணவு பதனீட்டாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதத்துக்குப் பின்னரான நிலைமை தற்போதும் நீடிப்பதாக அவர்கள் மேலும் கூறினர்.

கொரோனா வைரஸ் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலவிய காலத்திலேயே 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கல் உப்பின் விலை சில நாட்களுக்கு முன்னர் சடுதியாக அதிகரிக்கப்பட்டு தற்போது ஒரு கிலோ உப்பு 350 ரூபா வரை விற்கப்படுகிறது.

உப்பு விலையின் இந்த அசுர வேக அதிகரிப்பினால் உப்பைக் கொண்டு பதனிடப்படும் உப உணவுகளை பதனிட முடியவில்லை என்று உணவு பதனிடுவோர் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை, அதிக விலை கொடுத்து உப்பை வாங்கி, உப்பைப் பிரதானமாகக் கொண்டு பதனிடப்படும் மோர் மிளகாய், ஊறுகாய், உப்புக் கருவாடு ஆகியவற்றை பதனிட முடியாததால் ஒருபுறம் இந்த உணவுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில், மிளகாய் கருவாடு தயாரிக்கப் பயன்படும் நெத்திலி, அய்யா மாசி, கூனி இறால், கட்டாப்பாரை போன்ற மீன்கள் மற்றும் தேசிக்காய் என்பனவற்றை விற்பனை செய்ய முடியவில்லை என விவசாயிகளும் மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக மிளகாய் உற்பத்தி செய்யப்படும் சில பிரதேசங்களில் ஒரு கிலோகிராம் மிளகாய் 100 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அங்குள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று கருவாட்டுக்காக சிறு மீன்களைப் பிடிப்போரும் உப்புக் கருவாடு தயாரிக்க முடியவில்லை என்பதால் சில நேரங்களில் பிடிக்கப்படும் மீன்களை விற்க முடியாததால் அவற்றைக் குப்பையில் கொட்டவேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் உப்பு விலை உயர்வினால் விவசாயிகளும் மீனவர்களும் இல்லத்தரசிகளும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் பெரு வெள்ளத்தினால் ஏற்பட்ட உப்புப் பற்றாக்குறையை நீக்க இந்தியாவிலிருந்து 30 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு இறக்குமதி செய்யப்படுவதாகவும் அது பெப்ரவரி மாத இறுதியில் இலங்கைக்கு வந்து சேர்ந்துவிடும் என்றும் அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மருந்துகளின் பாதுகாப்பு இருப்பை பராமரிக்க இலங்கை அரசு முடிவு!

கொழும்பு, மே. 15

நாட்டில் நிலவும் மருந்து பற்றாக்குறையைக் குறைக்க, மருந்துகளின் பாதுகாப்பு இருப்பை பராமரிக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

கேள்வி இரத்து மற்றும் தர ஆய்வுகளைத் தொடர்ந்து மருந்துப் பொருட்கள் நிராகரிக்கப்பட்டமை போன்ற தொடர்ச்சியான பிரச்னைகளுக்கு பதிலளிக்கும் விதமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அண்மைய மாதங்களில் மருந்துப் பற்றாக்குறைக்கு இந்தப் பிரச்னைகள் முக்கிய பங்களிப்பாக உள்ளன.

பிரதி அமைச்சரின் கூற்றுப்படி, திட்டமிடப்பட்ட அவசர கால இருப்பு ஆறு மாத காலத்துக்கு நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்கும்.

நிலையான விநியோகத்தை உறுதி செய்வதற்காக, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் அரசாங்கங்களுடனான ஒப்பந்தங்கள் மூலம் அரசாங்கம் நேரடியாக மருந்துகளை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளது.

இதுபோன்ற இடையக இருப்பைப் பராமரிப்பதன் மூலம், திறந்த சந்தையில் இருந்து மருந்துகளை வாங்குவதன் மூலம் தற்போது ஏற்படும் கூடுதல் செலவுகளையும் கணிசமாகக் குறைக்க முடியும்.

இந்த முயற்சியை முறைப்படுத்தி செயல்படுத்த விரைவில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்றும் ஹன்சக விஜேமுனி மேலும் கூறினார்.

# அதிக பயணிகளை ஏற்றிச் சட்டத்தை மீறும் இலங்கை போக்குவரத்து சபை!

கொழும்பு, மே. 15

பஸ்களின் இருக்கைகளின் எண்ணிக்கையை விட, அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வது சட்ட விரோதமானது என வீதிப் போக்குவரத்து, பாதுகாப்பு சவால்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் மேல் மாகாண செயலணியின் இணைப்பாளர் சஞ்சய் பெரேரா தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையும் இந்த சட்டத்தை மீறுவதாக அவர் குறிப்பிட்டார்.

கொத்மலை - கெரண்டி எல்ல பஸ் விபத்து தொடர்பில் கருத்துரைத்த அவர், இந்தியாவிலிருந்து தரமற்ற பஸ்களே இறக்குமதி செய்யப்படுவதாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதேவேளை, கொத்மலை - கெரண்டி எல்ல பஸ் விபத்தில் காயமடைந்த பலர் அனுமதிக்கப்பட்டிருந்த கொத்மலை பிராந்திய வைத்தியசாலையின் வசதிகளை மேம்படுத்துவதற்காக, அங்கு கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வைத்தியசாலையின் நோயாளர்கள் சிகிச்சை பெறும் பகுதிகளில் வசதியான சூழலை உருவாக்குவதற்கான செயல்பாடு இடம்பெறுவதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# எதிர்வரும் 19 முதல் நுளம்பு ஒழிப்பு வாரம் பிரகடனம்!

கொழும்பு, மே. 15

சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் 19ஆம் திகதி முதல் விசேட நுளம்பு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப் படவுள்ளது.

நேற்று முன் தினம் வரை நாட்டில் 19,724 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், அவர்களில் அதிகமானவர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உயர் இரத்த அழுத்தமே நாட்டில் 70வீத மரணங்களுக்கு காரணம்!

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, மே. 15

**"இலங்கையில் ஏற்படும் மொத்த மரணங்களில் 70 வீதமானவை உயர் இரத்த அழுத்தத்தால் ஏற்படும் நோய்களினாலேயே நிகழ்கின்றன" என சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு தெரிவித்துள்ளது.**



இது குறித்து தொற்றா நோய்கள் பிரிவின் விசேட வைத்தியர் சமிந்தி சமரகோன் கருத்துத் தெரிவிக்கையில்-

2021ஆம் ஆண்டு தொற்றா நோய்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், நாட்டு மக்களில் 34.8 வீதமானோர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 64 வீதமானோர் இதற்கு எவ்வித மருந்துகளையும் பயன்படுத்தவில்லை-என்றார்.

(அ)



# சொகுசு பஸ் விபத்து!

கொழும்பு, மே. 15

அம்பாறை - மகியங்கனை வீதியில், மகியங்கனையின் வேவத்த பகுதியில் சொகுசு பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தால் பஸ்ஸில் பயணித்த எவருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என மகியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# சுவிஸ் தூதுவர் இல்லத்தில் திருட்டு; மூன்று பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, மே. 15

கொழும்பு, கொள்ளுப்பிட்டியவில் உள்ள சுவிஸ் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடந்த திருட்டு தொடர்பாக, தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் பொறுப்பதிகாரி, மற்றொரு பாதுகாப்பு அதிகாரி உட்பட மூன்று பேரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அங்கு தங்க நகைகள், வைரம் பதித்த மோதிரம் மற்றும் சுமார் ரூ.4.5 மில்லியன் மதிப்புள்ள ஆடம்பரக் கைக்கடிகாரங்கள் ஆகியவை ஒரு பெட்டகத்திலிருந்து திருடப்பட்டன.

சுவிற்சர்லாந்துக்கு ஏப்ரல் 12 ஆம் திகதி சென்று ஏப்ரல் 27 ஆம் திகதி திரும்பிய சுவிஸ் தூதுவர் அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னரே இவர்கள் மூவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தூதுவர் சுவிற்சர்லாந்துக்குச் சென்ற பிறகு, சந்தேக நபர்கள் சட்டவிரோதமாக நகல் செய்யப்பட்ட சாவியைப் பயன்படுத்தி அவரது பெட்டகத்தை அணுகியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. நகைகள் மற்றும் கைக்கடிகாரங்கள் பின்னர் திருடப்பட்டன.

விசாரணைகளைத் தொடர்ந்து, திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட நகல் சாவியை உருவாக்கியதாகக் கூறப்படும் சாவி வெட்டும் தொழிலாளி ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

திருடப்பட்ட பொருட்களின் ஒரு பகுதியாக நம்பப்படும் பல மோதிரங்களை வெலிகமவில் உள்ள சந்தேகத்திற்குரிய பாதுகாப்பு அதிகாரி ஒருவரிடமிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

திருட்டு நடந்த நேரத்தில், இரண்டு பெண் வீட்டு வேலைக்காரர்களும் ஒரு சமையல்காரரும் வீட்டில் இருந்தனர். அவர்கள் விசாரிக்கப்பட்டு எந்த தொடர்பும் இல்லை என்று நிரூபிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

மூன்று சந்தேக நபர்களும் புதுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மே 22 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(அ)

# போரின் பின் கூட்டமைப்பை தடை செய்திருக்கவேண்டும்!

## சரத் வீரசேகர கருத்து



கொழும்பு, மே. 15

கனடாவில் பிரம்டன் நகரில் சிங்கௌசி பொதுப் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டும் எனவும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தடை செய்திருந்தால் பல பிரச்னைகளுக்கு தீர்வு கண்டிருக்கலாம் எனவும் பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கனடாவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கனடாவில் பிரம்டன் நகரில் சிங்கௌசி பொதுப் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் இனங்களுக்கிடையில் வீண் பிரச்னைகளை ஏற்படுத்தும்.

இவ்வாறான செயற்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் அரசியல் செயற்பாடுகளுக்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அதனை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தடை செய்திருக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்யாமல் அலட்சியப்படுத்தியது மகிந்த ராஜபக்ஷ செய்த அரசியல் ரீதியான தவறாகும்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கடந்த காலங்களை மறந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது அரசியல் இலாபத்துக்காக அரசியல் அதிகார பகிர்வு பற்றி பேசி தேவையில்லாத பிரச்னைகளை ஏற்படுத்தி, இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரிவினைவாதத்தை மீண்டும் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் தற்போது இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

அரசியல் பிரபல்யத்துக்காக தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை அலட்சியப்படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்-என்றார்.

(அ)

# மயக்க மருந்து கலந்த குளிர்பானம் கொடுத்து பெண்ணிடம் கொள்ளை!

## வான் சாரதி பொலிஸாரால் கைது

கொழும்பு, மே. 15

வாடகை வானில் பயணித்த வெளிநாட்டுப் பெண் ஒருவருக்கு மயக்க மருந்து கலந்த குளிர்பானத்தை குடிக்கக் கொடுத்து பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டு, அந்த பெண்ணை 30 அடி ஆழமுடைய பள்ளத்தில் தள்ளிவிட்டுச் சென்றதாக கூறப்படும் வாடகை வான் சாரதி ஒருவர் எல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வாடகை வான் சாரதி நுவரெலியாவில் வசிக்கும் 70 வயதுடைய ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஆவார்.

இந்த சம்பவத்துக்கு முகங்கொடுத்தவர் அல்ஜீரியா நாட்டைச் சேர்ந்த 28 வயதுடைய பெண் ஆவார்.

அல்ஜீரியப் பெண் ஒருவர் நுவரெலியாவிலிருந்து எல்ல நோக்கி சுற்றுலா செல்வதற்காக வாடகை வான் ஒன்றை ஒன்லைன் ஊடாக முன்பதிவு செய்துள்ளார்.

பின்னர் இந்த அல்ஜீரிய பெண் சந்தேக நபரின் வாடகை வானில் நுவரெலியாவிலிருந்து எல்ல நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும்போது சந்தேக நபரான வாடகை வான் சாரதி அல்ஜீரியப் பெண்ணுக்கு குளிர்பானம் ஒன்றை குடிக்க கொடுத்துள்ளார்.

அல்ஜீரிய பெண் அந்த குளிர்பானத்தை குடித்த சிறிது நேரத்தில் மயக்கமடைந்துள்ளார்.

பின்னர் சந்தேக நபரான வாடகை வான் சாரதி அல்ஜீரியப் பெண்ணிடமிருந்த சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடி, அல்ஜீரிய பெண்ணை ராவணா எல்ல அருகே உள்ள 30 அடி ஆழமுடைய பள்ளத்தில் தள்ளிவிட்டுச் சென்றுள்ளார்.

மயக்கத்திலிருந்த எழுந்த அல்ஜீரிய பெண் காயங்களுடன் எல்ல பொலிஸ் நிலையத்துக்கு சென்று முறைப்பாடு அளித்துள்ளார்.

பின்னர் பொலிஸார் இணைந்து அல்ஜீரிய பெண்ணை பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான வாடகை வான் சாரதி கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு கையடக்கத் தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# நீண்ட தூர பஸ் சாரதிகளுக்கு கட்டாய ஓய்வு நேரம் அவசியம்

கொழும்பு, மே. 15

கொத்மலை - கெரண்டியெல்ல பகுதியில், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து, நீண்டதூர பஸ்களில் பணிபுரியும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு வழங்கப்படும் ஓய்வு நேரத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடினமான வீதிகளில் இரவில் மேற்கொள்ளப்படும் நீண்ட தூர பயணிகள் போக்குவரத்து சேவைகள் குறித்து மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கதிர்காமம்-குருநாகல் போக்குவரத்து என்பது, அதிகப்படியான நேரத்தை எடுத்துக்கொள்ளும் போக்குவரத்து சேவையாகும். இதுபோன்ற பயணங்களில் ஈடுபடும் பஸ் ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வு நேரத்தில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். இதுபோன்ற நீண்ட தூர பயணத்துக்கு முன் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்க சரியான ஓய்வு கிடைக்குமா? அதற்குத் தேவையான வசதிகள் பஸ் நிலையங்களால் வழங்கப்படுகின்றனவா? அவர்கள் பயணத்தின்போது ஏதேனும் இடைவேளை எடுக்கிறார்களா? என்பதையும் நாங்கள் கவனித்துள்ளோம்.

போக்குவரத்து அமைச்சரின் அறிவுறுத்தலுக்கமைய, விபத்து குறித்து விசாரணை நடத்துவதற்கு, தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த உதவி ஆணையர்கள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# கடலில் தொடரும் திருட்டுகள் தீர்வு தரக் கோரி ஆர்ப்பாட்டம்!

## வாழைச்சேனை மீனவர்கள் முன்னெடுப்பு



வாழைச்சேனை, மே 15
கடலில் நடக்கும் தொடர் திருட்டுகளுக்கு தீர்வு பெற்றுத் தருமாறு கோரி வாழைச்சேனை மீனவர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் அல் அமான் படகு உரிமையாளர்கள் சங்கம், அல் ஸபா மீனவர் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட மீனவர் சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்தப் போராட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆழ்கடல் தொழிலுக்கு செல்லும் படகுகளின் வலைகள் அறுக்கப்படுகின்றன. அத்துடன், மீன்களும் களவாடப்படுகின்றன. இதனால், பல இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. அடிக்கடி நடக்கும் இவ்வாறான சம்பவங்களால் சுமார் 2 ஆயிரம் வரையிலான குடும்பங்கள் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்.

போராட்டத்தின் நிறைவில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார மற்றும் வாழைச்சேனை கரையோர பாதுகாப்பு படை பொறுப்பதிகாரி சி. ஐ. விக்ரமசிங்ஹ ஆகியோருக்கு மனுக்களும் கையளிக்கப்பட்டன.

மனுக்களை பெற்ற அதிகாரிகள் ஒரு வார காலத்துக்குள் இதற்கான தீர்வை பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளனர். (ஐ)

# குருக்கள்மடத்தில் சவுக்கு காட்டுக்கு விஷமிகள் தீ!

## பல மரங்கள் எரிந்து நாசம்



மட்டக்களப்பு, மே 15
குருக்கள்மடம் கிராமத்தில் கடற்கரையில் சவுக்கு மரங்கள் அதிகளவு செறிந்து நிற்கும் காட்டுப் பகுதியில் திடீரென தீபரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்தத் தீ பரவலால் பல சவுக்கு மரங்கள் எரிந்து நாசமாகின. தீ பரவலையடுத்து அந்தப் பகுதியின் இளைஞர்களும் இராணுவத்தினரும் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டுவர கடுமையாக போராடினர்.

சவுக்கு மரங்கள் நிறைந்த இந்தப் பகுதி அடிக்கடி தீயால் பாதிக்கப்படுகிறது. திட்டமிட்டே மரங்களுக்கு தீ வைக்கப்படுவதாகவும் இது குறித்து உடனடியாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம்




அக்கரைப்பற்று, மே 15
நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலாளரின் நெறிப்படுத்தலின் கீழ் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை , நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன், உதவி பிரதேச செயலாளர் பே. பிரணவரூபன், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-01)

# துரோகிகளாலேயே வீழ்ந்தது மு. கா. !

அட்டாளைச்சேனை, மே 15
சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் இருந்துகொண்டு பதவிகளை அனுபவித்த துரோகிகளாலேயே அட்டாளைச்சேனை - பாலமுனை பிரதேச இரு வட்டாரங்கள் தோற்கப்பட காரணம் என்று அந்தக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

மேலும், எமது கட்சிக்குள் இருந்துகொண்டு மாற்றுக் கட்சியினரிடம் கள்ளத்தனமாக தொடர்பு வைத்து கடைசி நிமிடம் வரை கட்சியில் தேர்தல் கேட்பதாக கூறி கட்சியை ஏமாற்றினார்கள். அவ்வாறான துரோகிகள் இப்போது மக்கள் மத்தியில் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் 4 பாராளுமன்ற உறுப்பினர்களும், 2 இராஜாங்க அமைச்சர்களும் கட்சியை சீர்குலைத்தார்கள். இன்று கட்சி சிறப்பாக புனரமைக்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தலில் எமது வேட்பாளர்களை தோற்கடிப்பதற்கான பல திட்டங்களை முன்னெடுத்த போதிலும் அவற்றை முறியடித்து நாம் வெற்றி கண்டுள்ளோம் - என்றார். (ஐ)

# திருக்கோவில் சந்தையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!



திருக்கோவில், மே 15
முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நினைவேந்தலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் திருக்கோவில் தம்புலுவில் பொதுச் சந்தை முன்பாக நடைபெற்றது.

அம்பாறை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினரால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நடந்த இந்த நிகழ்வில் விசேட பூசை வழிபாடு இடம் பெற்ற பின்னர் முள்ளிவாய்க்கால் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. எதிர்வரும் 18ஆம் திகதி வரை அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் இந்த சங்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் - பொதுமக்கள் ஆலோசனை குழு அமைப்பு

சாய்ந்தமருது, மே 15
சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பிரிவுக்குள் காணப்படும் குற்றச் செயல்களைக் குறைத்து, பொலிஸாரின் கடமைகளை இலகுபடுத்தும் பொருட்டும் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக ஆலோசனைக்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு சாய்ந்தமருதில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், பல்வேறு பட்ட பிரச்னைகள் குறித்து ஆராயப்பட்டன. (ஐ)

# அட்டாளைச்சேனையில் கழிவு அகற்றல் சீரின்மையால் சிரமம்

அட்டாளைச்சேனை, மே 15
அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வாரம் ஒரு முறை மேற்கொள்ளப்பட்டுவரும் திண்மக்கழிவு அகற்றும் வேலைத்திட்டம் முறையாக மேற்கொள்ளப்படுவதில்லை என்று பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கழிவகற்றும் வாகனங்கள் திண்மக்கழிவுகளை பெற்றுக் கொள்ள அடிக்கடி வராமல் இருப்பதால், வீதிகளில் வைக்கப்படும் கழிவுகள் கட்டாக் காலிகளால் இழுத்துச் செல்லப்பட்டு அந்தப் பகுதி முழுவதும் இறைந்து கிடப்பதாகவும் இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை இந்த விடயத்தில் தொடர்ந்தும் அலட்சியமாக செயல்பட்டு வருவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்துடன், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கழிவகற்றும் செயல்முறையில் இனப்பாகுபாடும் காட்டப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இது விடயத்தில் நடவடிக்கை எடுக்குமாறு



கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ. எல். எம். அஸ்மியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# களுவாஞ்சிக்குடியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி



மட்டக்களப்பு, மே 15
களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைப் பகுதியில் முள்ளிவாய்காலில் உயிர் நீத்த உறவுளை நினைந்து வருடாந்தம் வழங்கப்பட்டுவரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பி. ஜெபநேசனின் ஏற்பாட்டில் களுவாஞ்சிகுடி பொதுச்சந்தையின் முன்னால் வைத்து கஞ்சி காய்சி சிரட்டையில் மக்களுக்கு பகிரப்பட்டன. (ஐ)

# 50 இலட்சம் மக்கள் கடும் பட்டினியில்!

## குழந்தைகள் மரணத்தின் பிடியில்

நியூயோர்க், மே 15

**காஸாவில் 50 இலட்சம் மக்கள் கடுமையான பட்டினியை எதிர்கொள்கின்றனர் என்று ஒருங்கிணைந்த உணவு பாதுகாப்பு அமைப்பு கூறுகிறது. இதனிடையே, "வரும் வாரங்களில் உணவு இன்மையால் வரும் நாட்களில் குழந்தைகள் இறப்பதைக் காண நேரும்", என்று யுனிசெவ் அமைப்பு எச்சரித்துள்ளது.**

போரால் பாதிக்கப்பட்ட காஸாவுக்கு கடந்த 10 வாரங்களாக உணவு, மருந்து, எரிபொருள் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் இஸ்ரேல் நிறுத்தியுள்ளது.

ஐ. நா., சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களின சுயாதீன கூட்டமைப்பான ஒருங்கிணைந்த உணவு பாதுகாப்பு அமைப்பு அதன் சமீபத்திய அறிக்கையில்,

காஸாவில் உணவு பாதுகாப்பு நிலைமை ஒக்ரோபர் 2024இல் அதன் கடைசி மதிப்பீட்டிலிருந்து கணிசமாக மோசமடைந்துள்ளது. அங்கு வாழும் பலஸ்தீனியர்கள் பஞ்சத்தின் கடுமையான அபாயத்தை எதிர்கொள்கின்றனர். மக்கள் உயிர் வாழ்வதற்கான அத்தியாவசிய பொருட்கள் ஏற்கனவே பெரும்பாலான இடங்களில் முடிந்து விட்டன. சில இடங்களில், வரும் வாரங்களில் அது முடிந்துவிடும். அனைத்து மக்களும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர். காஸாவில் 50 இலட்சம் மக்கள் - அதாவது ஐந்தில் ஒருவர் கடுமையான பட்டினியை எதிர்கொள்கிறார்கள் - என்று கூறியுள்ளது.

யுனிசெவ் அமைப்பின் ஜொனதன் கிரிக்ஸ் கூறுகையில்,

"போர் நிறுத்த காலத்தில் நாங்கள் கொண்டு வந்த மருத்துவ உபகரணங்களின் அளவு மிகக் குறைவு. இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு நாங்கள் சிகிச்சை அளித்துள்ளோம். வரவிருக்கும் வாரங்களில், அதிகமான குழந்தைகள் இறப்பதைக் காண்போம் என்று நாங்கள் அஞ்சுகிறோம்" என்று கூறினார்.

இதனிடையே, "ஹமாஸ் அமைப்பிடம் மீதமுள்ள 59 பணயக் கைதிகளை விடுவிக்க அழுத்தம் கொடுப்பதே இந்த முற்றுகையின் நோக்கம் - இது தொடரும் என்று கூறியுள்ளது. (ஐ)

# "உலகின் ஏழ்மையான ஜனாதிபதி" காலமானார்!

பெஸோ, மே 15



பெப்பே என்று அழைக்கப்படும் உருகுவேயின் முன்னாள் ஜனாதிபதி ஜோஸ் முஜிகா தனது 89ஆவது வயதில் காலமானார்.

இவர் 2010 - 2015 வரை உருகுவேயை ஆட்சி செய்தார். முன்னாள் கெரில்லா போராளியான அவர், தனது அடக்கமான வாழ்க்கை முறையால் உலகின் ஏழை ஜனாதிபதி என்று அறியப்பட்டார்.

முஜிகா கியூப புரட்சி மற்றும் சோசலிச கொள்கையால் ஈர்க்கப்பட்டார். 1960களில் தேசிய விடுதலை இயக்கத்தை நிறுவ உதவியதுடன், உருகுவே அரசாங்கத்துக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்தார். இதனால், அரசாங்கத்துக்கு எதிரியான அவர் 4 முறை சிறையில் அடைக்கப்பட்டார். 6 முறை சுடப்பட்டு இறக்கும் தருவாயிலிருந்து காப்பாற்றப்பட்டார்.

1973இல் இராணுவம் உருகுவே ஆட்சியை கவிழ்த்தது. 14 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். 1985இல் உருகுவேயில் மீண்டும் ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. அதைத் தொடர்ந்து விடுதலையான அவர், 2005இல் இடதுசாரி கூட்டணி மூலம் அமைச்சரானார். 2010இல் ஜனாதிபதியானார்.

ஜனாதிபதியாக இருந்த முஜிகா ஜனாதிபதி மாளிகையை மறுத்தார். தனது மனைவிக்கு சொந்தமான சாதாரண வீட்டில் பாதுகாப்பு எதுவுமின்றி தங்கியிருந்தார். சாதாரண உடைகளையே அணிந்தார். தனது காரை தானே செலுத்தினார். தனது ஊதியத்தில் பெரும்பகுதியை தானமாக அளித்தார். இதனால், அவர் உலகின் ஏழ்மையான ஜனாதிபதி என்று அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பசி தின்னும் உயிர்...!

போர் பூமியான காஸாவில் பஞ்சம் நிலவுகிறது. பிறந்து 5 மாதங்களேயான ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டு உயிருக்கு போராடும் ஷூவார் அக்ஷூர் என்ற குழந்தை....

படம் - நன்றி பி. பி. ஸி.

தமிழகம் - பொள்ளாச்சி பாலியல் குற்றம்:

# 9 பாலியல் குற்றவாளிகளுக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை!

சென்னை, மே 15

தமிழகத்தின் பொள்ளாச்சியில் இளம் பெண்களை பாலியல் வன்புணர்வு மற்றும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கிய 9 பேருக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கு 85 இலட்சம் ரூபாய் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 3 கோடி ரூபாய்) இழப்பீடு வழங்கவும் கோவை மகளிர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, கோவையை அடுத்த பொள்ளாச்சியில் இளம் பெண்களை காணொலி எடுத்து பாலியல் துன்புறுத்தல் செய்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் கடந்த 2019 பெப்ரவரி மாதம் முறைப்பாடு அளித்தார்.

இந்த முறைப்பாட்டை விசாரித்த பொலிஸார் 9 பேரை கைது செய்தனர். 48 சாட்சியங்கள், 200இற்கும் மேற்பட்ட ஆவணங்களுடன் மடிக்கணினி, கைபேசி, மெமறிகார்ட், கார் உள்ளிட்ட 30இற்கும் மேற்பட்ட இலத்திரனியல் ஆவணங்களும் ஆதாரங்களாக முன்வைக்கப்பட்டன.

தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து, நேற்று முன்தினம் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட 9 பேருக்கும் தண்டனை அறிவிக்கப்பட்டது. அவர்கள் அனைவருக்கும் சாகும் வரை ஆயுள் சிறை விதித்த நீதிபதி, பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கு 85 இலட்சம் ரூபாய் இழப்பீடும் வழங்க உத்தரவிட்டார். (ஐ)

# 584 நாட்களுக்கு பின்னர் பணய கைதி விடுவிப்பு!

டெல் அவிவ், மே 15

ஹமாஸ் அமைப்பால் பணயக் கைதியாக பிடிக்கப்பட்ட அமெரிக்க - இஸ்ரேலியரான இடன் அலெக்சாண்டர் என்பவர் 584 நாட்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்கு கடந்த 2023 ஒக்ரோபர் 7ஆம் திகதி புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில், ஆயிரத்து 150 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன், 254 பேரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து இஸ்ரேல் காஸா மீது போர் தொடுத்தது. சமாதான பேச்சுகளையடுத்து இதுவரை 54 பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.



இந்நிலையில், இஸ்ரேல் வாழ் அமெரிக்கரான இடன் அலெக்சாண்டரை விடுவிக்க அமெரிக்கா பேச்சு நடத்தியது. இதைத் தொடர்ந்து, இடன் அலெக்சாண்டர் சர்வதேச செஞ்சிலுவை குழு மூலமாக அவரின் குடும்பத்தினரிடம் ஒப்டைக்கப்பட்டார்.

584 நாட்களுக்கு இடன் அலெக்சாண்டர் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் ஹமாசிடம் பணயக் கைதியாக இருந்த கடைசி இஸ்ரேலிய அமெரிக்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானின் பயங்கரவாதத்தை பொறுத்தால் முழு உலகுக்கும் அழிவு!

## பலூசிஸ்தான் விடுதலை படை

இஸ்லாமாபாத், மே 15

சர்வதேச சமூகம் பாகிஸ்தானின் பயங்கரவாத செயல்களை தொடர்ந்து பொறுத்துக் கொண்டால் அது முழு உலகின் அழிவுக்கும் வழிவகுக்கும் என்று பலூசிஸ்தான் விடுதலை படை (பி. எல். ஏ.) தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் இது குறித்து மேலும் கூறுகையில்,

பாகிஸ்தானின் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு சர்வதேச அளவில் தொடர்ந்து சகிப்புத்தன்மை காட்டுவது தெற்காசிய பிராந்தியத்தில் உறுதியற்ற தன்மையை உருவாக்கும். சர்வதேச பயங்கரவாதிகளின் புகலிடமாக விளங்கும் பாகிஸ்தான் இருப்பு முழு உலக அழிவுக்கும் விரைவில் வழிவகுக்கும். ஏனெனில், லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது போன்ற அரச ஆதரவு பெற்ற பயங்கரவாதக் குழுக்களின் எழுச்சிக்கு மையமாக பாகிஸ்தான் இருந்து வருகிறது. எனவே சர்வதேச சமூகம் பாகிஸ்தானை தீவிரவாத நாடாக அறிவிக்க வேண்டும்.

இந்தியாவும், சர்வதேச சமூகமும் பாகிஸ்தானுக்கு எதிரான தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதை செய்ய தவறினால் மேலும் இரத்தக்களரி ஏற்படும். பலூசிஸ்தான் விடுதலையை குறிக்கோளாக வைத்து மட்டுமே நாங்கள் செயல்பட்டு வருகிறோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

ஐ. பி. எல். பிளேஒவ் சுற்றில்

# தென்னாபிரிக்கா, இங்கிலாந்து வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள்

புதுடில்லி, மே 15

ஐ. பி. எல். தொடரின் பிளே ஒவ் சுற்று போட்டியில் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று அறிய வருகிறது.

இந்தியா - பாகிஸ்தான் போர் பதற்றத்தால் இடை நிறுத்தப்பட்ட ஐ. பி. எல். போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகிறது. ஜூன் 3ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐ. பி. எல். தொடரின் பிளே ஒவ் சுற்றில் இங்கிலாந்து, தென்னாபிரிக்க வீரர்கள் பலர் பங்கேற்க மாட்டார்கள் என்று தகவல் வெளியாகி யுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியால் தென் னாபிரிக்க வீரர்களும் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரால் இங்கிலாந்து வீரர்களும் பங்கேற் பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால், மார்கோ ஜோன்சன் (பஞ்சாப்), மார்க்ரம்




(லக்னோ), ரியான் ரிக்கல்டன் (மும்பை), வில் ஜாக்ஸ் (மும்பை), டிரிஸ்டன் ஸ்டப்ஸ் (டெல்லி), ஜோப்ரா ஆர்ச்சர் (ராஜஸ்தான் றோயல்ஸ்), ஜேக்கப் பெத்தேல் (றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு), ஜோஸ் பட்லர் (குஜராத் ரைட்டன்ஸ்) ஆகியோர் பிளே ஒவ் சுற்றில் ஆட மாட்டார்கள் என்று தெரிய வருகிறது. (ஐ)

# றொனால்டோவின் மகன் போர்த்துக்கல் அணியில்!



லிஸ்பன், மே 15

பிரபல உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோவின் மகன் டோஸ் சாண்டோஸ் சர்வ தேச போட்டிகளில் அறிமுகமாகியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த விளாட்கோ மார்கோவிக் சர்வதேச தொடரின் முதல் போட்டியில் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான போர்த்துக்கல் அணியில் சாண்டோஸ் அறிமுகமானார்.

இந்தப் போட்டியில், போர்த்துக்கல் அணி ஜப்பானை 4-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.போர்ச்சுகல் அணிக்காக தனது மகன் அறிமுக மானதில் கிறிஸ்ரியானோ றொனால்டோ தனது மகிழ்ச் சியை வெளிப்படுத்தினார். தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், " போர்த்துக்கல் அணிக்காக நீ அறிமுகமா னதற்கு வாழ்த்துகள். உன்னை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்", என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

# பாகிஸ்தான் அணியின் பயிற்றுநரானார் ஹசன்




இஸ்லாமபாத், மே 15

பாகிஸ்தான் ஒருநாள், இருபது - 20 அணிகளின் தலைமை பயிற்றுவிப்பாளராக நியூசிலாந்தைச் சேர்ந்த மைக் ஹஸன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவிக்கு 4 வெளிநாட்டினர் உட்பட ஏழு பேர் விண்ணப்பித்திருந்தனர். ஹசன் தற்போது பாகிஸ் தான் சுப்பர் லீக்கின் நடப்பு சாம்பியனான இஸ்லாமா பாத் யுனைற்றட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாள ராக பணியாற்றி வருகிறார்.

50 வயதான இவர் ஏற்கனவே நியூசிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் குழுவில் இருந்துள்ளார். அத்துடன், ஐ.பி.எல். தொடரில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் பயிற்றுவிப்பாளராகவும் இருந்துள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இருபது - 20 தொடரிலிருந்து ஹசன் பாகிஸ்தான் அணியின் தலை மைப் பயிற்றுவிப்பாளர் பதவியை பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



உலக டெஸ்ட் சம்பியனஷிப்:

# ஆஸி., தென்னாபிரிக்க அணிகள் அறிவிப்பு!

சிட்னி, மே 15

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக் கான தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய அணிகள் அறி விக்கப்பட்டுள்ளன.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் ஜூன் 11ஆம் திகதி இந்தப் போட்டி நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அணி விவரம்: அவுஸ்திரேலியா - உஸ்மான் கவாஜா, சாம் கோன்ஸ்டாஸ், மார்னஸ் லபுசாக்னே, கமரூன் கிறீன், ஸ்ரீவ் ஸ்மித், டிராவிஸ் ஹெட், பியூ வெப்ஸ்டர், அலெக்ஸ் கேரி, ஜோஷ் இங்கிலிஸ், மிட்செல் ஸ்ரார்க், பட் கம்மின்ஸ் (அணித்தலைவர்), ஜோஷ் ஹசில்வூட், ஸ்கொட் போலண்ட், நதன் லியோன், மத்தியூ குஹ்னெமன், பிரெண்டன் டாகெட் (மேலதிக வீரர்)

தென்னாபிரிக்கா - டெம்பா பவுமா (அணித்தலை வர்), டோனி டி ஜோர்ஜி, ஐடன் மார்க்ரம், வியான் முல்டர், மார்கோ ஜோன்சன், ககிசோ ரபாடா, கேசவ் மகராஜ், லுங்கி நிகிடி, கார்பின் போஷ், கைல் வெர் ரைன், டேவிட் பெடிங்ஹாம், டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ரியான் ரிக்கல்டன், செனுரன் முத்துசாமி, டேன் பற் றர சன். (ஐ)

# இத்தாலி ஓப்பின் ரென்னிஸ்; சபலெங்கா காலிறுதியில்!



ரோம், மே 15

இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனையான அரினா சபலெங்கா காலிறுதிக்கு முன்னேறினார்.

களிமண் தரை போட்டியான இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த மூன்றா வது சுற்றுப் போட்டியில் பெலாரஸின் அரினா சப லெங்கா உக்ரைனின் மார்ரா கோஸ்ட்யுக்கை எதிர் கொண்டார்.இதில், சபலெங்கா 6-1, 7-6 (10-8) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறி னார். (ஐ)

# தென்னாபிரிக்க அணியில் தமிழ் வம்சாவளி வீரர்!



கேப்டவுன், மே 15

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக் கான தென்னாபிரிக்க அணியில் தமிழ் வம்சாவளி வீரர் இடம்பிடித்துள்ளார்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா தென்னாப்பிரிக்கா அணிகள் மோத வுள்ளன. இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் எதிர் வரும் ஜூன் 11ஆம் திகதி இந்தப் போட்டி நடைபெற வுள்ளது.

இந்தப் போட்டிக்கான தென்னாபிரிக்க அணியில் தமிழ் வம்சாவளியினரான சுழற்பந்து வீச்சாளர் சேனு ரான் முத்துசாமி இடம்பிடித்துள்ளார்.இந்தியா - தமிழ கம் - நாகபட்டினத்தை பூர்வீகமாக கொண்ட இவர் 2019இல் அறிமுகமானார். இதுவரை 4 டெஸ்ட் போட் டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இத்தாலி ஓப்பின் ரென்னிஸ்; மெத்வதேவ் அதிர்ச்சி தோல்வி



ரோம், மே 15

இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரர் மெத்வதேவ் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் தொடர் ரோமில் நடை பெற்று வருகிறது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்றில் ரஷியாவின் டேனில் மெத்வதேவ், இத்தாலியின் லாரன்சோ முசெட்டி உடன் மோதினார்.

இதில் முசெட்டி 7-5, 6-4 என்ற செற் கணக்கில் வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். இதனால் தரவரிசையில் 10ஆவது இடத்தில் உள்ள டேனில் மெத் வதேவ் தொடரில் இருந்து வெளியேறினார்.

## செம்மணியில்...

திகதி சம்பவ இடத்தில் நீதவான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

இதன்போது, மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியைஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே, அங்கு அகழ்வாய்வு இடம்பெறவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

துறைசார் வல்லுநர் பேராசிரியர் சோமதேவ தலைமையில் இந்த ஆய்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

பேராசிரியர் சோமதேவ கடந்த மூன்றாம் திகதியன்று மனித எச்சங்கள் அவதானிக்கப்பட்ட இடத்தில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கொத்மலையில்...

- கெரண்டிஎல்ல பகுதியில் நடந்த விபத்தில் 24 பேர் உயிரிழந்தனர். அந்த இடத்துக்கு அருகேயுள்ள புளூம்பீல்ட் தோட்டப் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஹைஏஸ் வாகனம் வீதியை விட்டு விலகியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள் கம்பளை, கொத்மலை மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் - ராஜங்கனையிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா வந்துவிட்டு திரும்பியவர்களே விபத்துக்கு உள்ளாகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## டிரான்...

உள்ளன. நான் அவற்றை அப்போது வெளிப்படுத்துவேன் - என்று சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட முன்னதாக ஹரக் கட்டா கூறினார்.

மேலும், "தங்காலை சிறையில் தொடர்ந்து நான் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் மாதம் ஒரு கோடி ரூபாய் செலவு ஏற்படும்", என்றும் அவர் கூறியுள்ளார்.

பாதாள உலகக் குழுவை சேர்ந்த ஹரக் கட்டா என்றியப்பட்ட நதுன், குடு சலிந்து என்றறியப்பட்ட சலிந்து மல்ஷிகா ஆகியோர் மடகஸ்காரில் கைது செய்யப்பட்டு, 2023ஆம் ஆண்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவின் தங்காலை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நல்லிணக்க...

கனடா தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது. 2024 ஜூனிலும் இதனை மீண்டும் உறுதிப்படுத்தியது.

"கனடாவின் பிரம்டன் நகரிலுள்ள சிங்கவௌசி பூங்காவில் தமிழ் இனப்படுகொலையை குறிக்கும்முகமாக நினைவுச் சின்னம் ஒன்றை நிர்மாணிப்பது குறித்து, இலங்கை அரசாங்கம் பல முறை தனது கடும் கண்டனங்களை தெரிவித்திருந்தது. பிரம்டன் நகர சபையின் இந்த வருந்தத்தக்க முயற்சியை தலையிட்டுத் தடுக்குமாறு கனடாவின் மத்திய அரசாங்கத்தை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

"இந்தச் செயல்பாடு குறித்த முன்னெடுப்புகளை, பரந்தளவிலான இலங்கை மற்றும் கனடிய சமூகங்களுக்கு எதிரான ஒன்றாக இலங்கை அரசு கருதுகிறது. இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பரப்புவதும் கட்டுக்கதைகளை அடிப்படையாகக்கொண்ட நினைவுச் சின்னங்களை நிர்மாணிப்பதும் பொது மக்களை தவறாக வழிநடத்துவது மட்டுமல்லாமல் அனைத்து சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் நீடித்த அமைதிக்கான இலங்கையின் அயராத முயற்சிகளை சீர்குலைப்பவையாக அமையும் என்று இலங்கை அரசு உறுதியாக நம்புகிறது - என்றுள்ளது. (ஐ)

## தமிழின...

முன்னெடுக்கப்படும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

"இந்தக் கண்காட்சியில் மாணவர்கள், பொதுமக்கள், ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்று, இனப்படுகொலை வரலாற்றை அடுத்த சந்ததிக்கு கடத்த வேண்டும்", என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ)

## குமுதினி...

மாவிலித்துறைமுகப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டோர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி வளாகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

1985.05.15 அன்று காலை பல கனவுகளுடன் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி குமுதினி படகில் பயணித்தவர்களின் உயிர் நடுக்கடலில் பறிக்கப்பட்டு நான்கு தசாப்தங்கள் கடந்து நினைவுகூரப்படும் அஞ்சலி நிகழ்வுகளின்போது அனைவரும் கலந்து கொண்டு, படுகொலையானவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு நினைவேந்தல் ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## வடக்கில்...

இராஜதந்திரிகளை சந்தித்து கோரியுள்ளனர் தமிழ்த் தேசிய பேரவையினர்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் காணி உரிமையை நிலை நிறுத்த சர்வதேசத்தின் தலையீடு அவசி யம் என்ற கோரிக்கையின் அடிப்படை யில், பிரித்தானிய தூதுவர் அன்ட்ரூ பற்றிக், இந்திய துணைத் தூதுவர் பாண்டே, ஐ. நா. வதிவிட பிரதிநிதி மகான்ரே பிரான்ஸே, கனடிய தூதுவர் எரிக் வோல்ஸ் ஆகியோரை நேற்றைய தினம் தமிழ்த் தேசிய பேரவையினர் சந்தித்திருந்தனர்.

இந்த சந்திப்பின்போது, தமிழ் மக்களின் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நோக்கில் கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்துச் செய்ய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள மக்களின் காணிகளில் உழவு நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக விவசாயிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விடுதலைக்கு வலியுறுத்த வேண்டும், தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை அகற்றப்பட்டு அந்தக் காணிகளை மீண்டும் உரிமையாளர்களிடம் வழங்க அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும் ஆகிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மேலும், "இலங்கையின் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கரிசனை செலுத்தும் மையநாடுகளாக பிரித்தானியா, கனடா என்பன இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபைக்கு இது தொடர்பில் பங்கு இருப்பதால் ஐ. நாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியிடமும் இவ்விடயத்தில் அவரின் தலையீட்டையும் வலியுறுத்தியுள்ளோம்", என்றும் கூறினார்.

இந்த சந்திப்புகளில் தமிழ்த் தேசிய பேரவையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கர நேசன், தமிழ்த் தேசிய கட்சியின் தலை வர் சிரேஷ்ட சட்டத்தரணி ந. சிறீகாந்தா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

# சிறுமி கர்ப்பம் சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், மே 15

15 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய குற்றச்சாட்டில் 32 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 5 மாத கர்ப்பவதியான சிறுமி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேகநபர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்தமை தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தென்னிலங்கையில் வெள்ளம், மண்சரிவு ஏற்படும் அபாயம்!

## பிரதீபராஜா முன்னெச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 15

தென்மேற்கு பருவ மழை எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகிறது. வழக்கத்தை விட அதிக மழை கிடைக்க வாய்ப்பிருப்பதால் தென்னிலங்கையில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு அபாயம் ஏற்படலாம் என்று காலநிலை அவதானிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை தலைவருமான நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த ஆண்டுக்கான இலங்கைக்கான தென் மேற்கு பருவ மழையின் முதலாவது உடைவு எதிர்வரும் 25ஆம் திகதி நிகழவுள்ளது. 2025ஆம் ஆண்டின் தென்மேற்கு பருவ மழையின் முதற் சுற்றை எதிர்வரும் 25ஆம் திகதி காலி, மாத்தறை மாவட்டங்கள் எதிர் கொள்கின்றன.

எல்நினோ தெற்கு ஊசலாட்டம் நேர்மறையாக இருப்பதனால் தென்மேற்கு பருவ மழையின் அளவு இந்த ஆண்டு சராசரியை விட சற்று அதிகமாக இருக்கும். இந்த ஆண்டின் தென்மேற்கு பருவக்காற்று காலப்பகுதியில் 7-11 வரையான தடவைகளில் செறிவான அல்லது மிகச்செறிவான மழை சுற்றுகளுக்கு வாய்ப்புள்ளது.

இந்த முறையும் இலங்கையின் தென்மேற்கு, மேற்கு, மத்திய பகுதிகளில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு நிகழ்வுகளை தூண்டக்கூடிய செறிவான மழை வீழ்ச்சி மே 25 முதல் ஜூன் 6, ஜூன் 11-24, ஜூலை 9- 18, ஜூலை 23-30, ஒகஸ்ட் 3-15 காலப்பகுதிகளில் கிடைக்கும் வாய்ப்புள்ளது ( ஒன்றிரண்டு நாட்கள் முந்தலாம் அல்லது பிந்தலாம்).

ஆகவே, இலங்கையின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, பதுளை, காலி, மாத்தறை மாவட்டங்களில் உள்ள மக்கள் தற்போதே செறிவான பருவ மழையை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது அவர்களுக்கு எதிர்காலத்தில் வெள்ள மற்றும் நிலச்சரிவுகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்கும்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மேற்காவுகை மழை தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி வரை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

மேலும், நாளை கிழக்கு வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இந்தத் தாழமுக்கத்தால் இலங்கையின் எந்த ஒரு பகுதிக்கும் எத்தகைய பாதிப்பும் கிடையாது. ஆயினும், எதிர்வரும் 23 ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வடக்கிலிருந்து...

புதன்கிழமை நடைபெற்றது.

வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில், "வடக்கு மாகாணத்தில் அனைத்து வளங்களும் இருக்கின்றன. ஆனால், அதை உரிய முறையில் பயன்படுத்தவில்லை. வடக்கிலிருந்து சிலர் ஏற்றுமதிகளில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலானோர் மூன்றாம் தரப்பு ஊடாகவே ஏற்றுமதிகளை முன்னெடுக்கின்றனர். அவர்கள் நேரடியாக ஏற்றுமதியை முன்னெடுக்கக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். ஏற்றுமதியுடன் தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைந்து இதனை செயல்படுத்தவேண்டும் -என்று ஆளுநர் கூறினார்.

சுங்கத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ரவீந்திரகுமார், "சாதாரண விவசாயியும் ஏற்றுமதியாளராக வேண்டும் என்ற நோக்கிலேயே இதைச் செயல்படுத்த முனைவதாகக் குறிப்பிட்டார். ஏற்றுமதி தொடர்பான நீண்ட நடைமுறைகள் காரணமாக சிறுதொழில் முயற்சியாளர்கள் பலர் ஏற்றுமதியை கைவிடுகின்றனர். எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கம்" என்று குறிப்பிட்டார்.

ஏற்றுமதியுடன் தொடர்புடைய அனைத்து திணைக்களங்களினதும் பிரதிநிதிகள் வடக்கில் உரிய அதிகாரத்துடன் இருக்க வேண்டும். இதற்குரிய அதிகார பரவலாக்கத்துக்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மேலும், ஏற்றுமதிக்கான சில பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கான வளங்கள் கொழும்பில் மாத்திரம் உள்ளமையால், அத்தகைய பரிசோதனைகள் யாழ்ப்பாணம், வவுனியா பல்கலைக்கழகத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்கான சாத்தியங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. ஒரு மாத காலத்தினுள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய திணைக்களங்களை ஒருங்கிணைத்து அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இந்தக் கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது. (ஐ-05)

## ஆனையிறவு...

கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், ரஜ உப்பு என்ற பெயரை மாற்றம் செய்து, ஆனையிறவு உப்பு என்ற பெயரில் மாற்றியதாக கூறுகின்றனர். ஆனால், இதுவரை பொதி செய்த உப்பு பைகளில் ரஜ உப்பு என்றே காணப்படுகிறது. ஆனையிறவு உப்பு என்ற பெயர் மாற்றம் செய்யப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சில் ஈடுபட்டனர் என போராட்டகாரர்கள் தெரிவித்தனர்.

பார்ப்பதற்கு வெளியே ஒரு தேசிய உப்பளமாக காணப்பட்டாலும் பல பிரச்னைகள் உள்ளன. எனவே இதற்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu

## அர்ச்சுனாவுக்கு எதிரான மனு விசாரணைகள் ஜூன் 26 இல்!

கொழும்பு, மே. 15

இராமநாதன் அர்ச்சுனாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் ஜூன் மாதம் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று புதன்கிழமை அறிவித்தது.

அர்ச்சுனாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரி சமூக செயற்பாட்டாளரான ஓஷல ஹேரத் என்பவரால் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு மாயாதுன்ன கொரயா மற்றும் மஹேன் கொபல்லவ ஆகியோர் அடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சாட்சியங்களை உறுதிப்படுத்துவதற்காக இந்த மனு எதிர்வரும் ஜூன் மாதம் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## பஸ் சில்லில் சிக்கி இரண்டு பேர் பலி!

கொழும்பு, மே. 15

மாத்தறை எலியகந்த பிரதேசத்தில் நடந்த வாகன விபத்தில் ஆணும் இளம்பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு 7 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. பஸ் ஒன்றை முந்திச் செல்ல முயன்றபோது, மோட்டார் சைக்கிள் வழுக்கி, பஸ்ஸின் பின்புறச் சக்கரத்தின் கீழ் இருவரும் சிக்கியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில், மாத்தறை தெலிஜ்ஜவில பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது ஆணும், மாத்தறை காசிவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயது இளம்பெண்ணும் உயிரிழந்துள்ளனர். (அ)

## கொத்மலை பஸ் விபத்து; பலி எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, மே. 15

கொத்மலை பஸ் விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 24ஆக உயர்வடைந்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி நுவரெலியா - கண்டி பிரதான வீதியின், கொத்மலை காவல்துறை பிரிவுக்கு உட்பட்ட இறம்பொடை - கெரண்டி எல்ல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் காயமடைந்து, கம்பளை ஆதார வைத்திய சாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

திஸ்ஸமஹாராம பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் கூறினர். (அ)

# மக்கள் ஆணையை அரசாங்கம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை

### கூறுகிறார் அஜித் பி பெரேரா

கொழும்பு, மே. 15

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை அரசாங்கம் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை அரசாங்கம் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என்று தான் கூறவேண்டும். ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று பொதுத் தேர்தலில் நாடுமுழுவதிலிலிருந்தும் பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைத்த போதிலும் இந்த அரசாங்கத்தினால் உரிய நவடிக்கைகளை மேற கொள்ள முடியவில்லை.



நாட்டு மக்களுக்கு தேவையான விடயங்களை இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அதே போன்று மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றியதாகவும் தெரியவில்லை. அதனால் குழப்பமடைந்த மக்களின் தீர்ப்பே உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகளில் வெளிப் பட்டிருந்தது. அரசாங்கம் இதனை புரிந்து கொள்ளும் என நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (அ)

## இறம்பொடை பஸ் விபத்தில் உயிரிழந்தோருக்கு இழப்பீடு!

கொழும்பு, மே. 15

கொத்மலை, கெரண்டிஎல்ல பகுதியில் கடந்த 11ஆம் திகதி ஏற்பட்ட பஸ் விபத்தில் உயிரிழந்த வர்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து இழப்பீடு வழங்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தீர்மானித் துள்ளார்.

அதன்படி, இழப்பீட்டுத் தொகை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, விபத்தில் உயிரிழந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 1 மில்லியன் ரூபா உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாதாள குழுக்களுடன் தொடர்புள்ள எதிரணியினர் குறித்து விசாரணை!

### பொதுப்பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே. 15



பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்தவிஜேபால தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இந்த விடயத்தை கூறினார். பாராளுமன்றில் தேசியப் பாதுகாப்பு பற்றி பேசும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களது கட்சிகளில் திட்டமிட்ட குற்றக் கும்பல்களுடன் தொடர்புடையவர்கள் அங்கம் வகிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான 50 இற்கும் மேற்பட்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இந்த நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## புதிய திருத்தந்தையை சந்தித்தார் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித்





கொழும்பு, மே. 15

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், புதிதாக நியமிக்கப்பட்ட திருத்தந்தை 14ஆம் சிங்கராயரை சந்தித்துள்ளார்.

மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ்/க்குப் பிறகு இலங்கையின் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் பரிந்துரைக்கப்பட்டவர்களில் ஒருவர்.

புதிய திருத்தந்தையை தேர்ந்தெடுப்பதற்காக வத்திக்கான் நகரில் உள்ள சிஸ்ரைன் தேவாலயத்தில் நடந்த கர்தினால்களின் கூட்டத்தில் அவரும் பங்கேற்றார். (அ)

பாடசாலைகளில் இடம்பெறும்

## பாலியல் துஷ்பிரயோகம் குறித்து முறையிட தொலைபேசி இலக்கம்

கொழும்பு, மே. 13

பாடசாலைகளில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங் கள் தொடர்பில் முறையிடுவதற்கு 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக் கு தொடர்பு கொள்ளு மாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அவசர தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் சேவை யில் இருக்கும். எனவே, பாடசாலை களில் பாலியல் துஷ்பிரயோக சம்ப வங்கள் இடம்பெற்றால் பாட சாலை அதிபர்கள் அல்லது பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவ, மாண விகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு அளிக் குமாறு தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் பாலியல் துஷ் பிரயோக சம்பவங்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ncpa@childprote ction.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் முறைப்பாடு அளிக்க முடியும். அத்துடன் தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபை யின் அலுவ லகத்துக்கு சென்றும் ( இல. 330, தலவத்துகொட வீதி, மாதி வெல, சிறி ஜயவர்தனபுர) முறைப் பாடு களை அளிக்க முடியும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# திலீபன் நினைவிடத்தில் ஆரம்பமான தமிழினப் படுகொலை ஊர்தி பவனி







யாழ்ப்பாணம், மே. 15

தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் நேற்று ஊர்திப்பவனியொன்று ஆரம்பமாகியது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் தற்போது இடம் பெற்றுவரும் நிலையில் இந்த ஊர்திப்பவனி ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது.

"தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும், தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி வேண்டும்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டு இனப் படுகொலை நினைவுத்தூபி வைக்கப்பட்டுள்ள நிலையில், வீதிக ளில் பயணித்த பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.